# டுப்டிஐஎஸ்டி 2021 (WTISD 2021) : சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் செயலாளர் நாயகம், ஹவுலின் சாகோ

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களினால் முன்னெடுக்கப்பட்ட டிஜிடல் பொருளாதாரம் மற்றும் தகவல் சமூகத்திற்கான ஆரம்பத்தை வழங்கிய டிஜிடல் நிலைமாற்றத்தினை நோக்கி எமது சமூகம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

கொவிட் - 19 இற்கு எதிரான பிரதானமான பாதுகாப்பு வழிகளில் ஒன்றாக தகவல் சமூகம் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. பல வெற்றிக் கதைகள் உள்ளன, அவை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் அதீத முக்கியத்துவம் மற்றும் நாடுகளுக்கிடையிலும் நாட்டுக்குள்ளும் ஆழமான டிஜிடல் சமநிலையற்ற தன்மை தொடர்பில் இரண்டும் முக்கியமானதொரு நிலையை காட்சிப்படுத்திக் காட்டுகின்றது.

இந்த தீர்க்கமான வருடத்தில், தொழில்முயற்சியின் எல்லாப் பரப்புக்களிலும் வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் டிஜிடல் நிலைமாற்றத்தின் நன்மைகளில் உலகை இணைப்பதற்கு உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க நாளை சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் பயன்படுத்தும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்தி, ஸ்மாட் கொள்கைகளை அமுல்படுத்தல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிடல் திறன்களில் முதலீடுகளை ஊக்கப்படுத்துவதற்கான வினைத்திறனான முன்னெடுப்பு மற்றும் டிஜிடல் பொருளாதாரத்திற்கு பிரதானமாக இருக்கின்ற ஏ1 முதல் 5 ஜி வரையான புதிய தொழில்நுட்பங்களுடன் எங்களுடைய சேவைகளை மேம்படுத்துதல் தொடர்பில் தேசிய உபாயங்களை வலுப்படுத்துவதற்கு இதுவொரு சந்தரப்பமாக அமையும்.

வரலாற்றில் இந்த சந்தர்ப்பம் ஒத்துழைப்பு மற்றும் பங்காண்மைக்கு அழைப்பு விடுகின்றது. டப்ளியுஎஸ்ஐஎஸ் செயற்பாட்டு மார்க்கங்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைப்பு 2030 நிகழ்ச்சிநிரல், ஐக்கிய நாடுகளின் நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள், மட்டுமல்லாது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஒன்றிய உலக தொலைத்தொடர்பு அபிவிருத்தி மாநாடு 2021 இன் “ நிலைபெறுதகு அபிவிருத்தியை அடைவதற்கு இணைக்கப்படாதவைகளை இணைத்தல்” என்ற தலைபில் மேம்படுத்துவதற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் சக்தியை இணைப்புச் செய்வதற்கு எங்களுடைய முயற்சிகளை தொடர்வதற்கு எங்களுடைய அங்கத்தவர்கள் மற்றும் அக்கரை காட்டுனர்களை நான் அழைக்கின்றேன் அதன் பெறுபேறாக ஒருவர் கூட இணைப்பின்றியோ அல்லது இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையிலோ இல்லை என்பதற்கு நாங்கள் சாட்சிகளாக இருந்து கொண்டிருக்கின்றோம் என்பதன் ஊடாக டிஜிடல் நிலைமாற்றத்தை நாம் அதிகரிக்கின்றோம்.

உங்களுடைய வெற்றிகக் கதைகளையும் மாறாக உங்களுடைய சவால்கள் மற்றும் கற்ற பாடங்களையும நாங்கள் கேட்க விரும்புகின்றோம். தகவல் தொடர்பாடல் ஒன்றியத்துடன் அவற்றை பகிர்ந்து கொள்ளவும் அத்தோடு “சாவால் நிறைந்த நேரத்தில் டிஜிடல் நிலைமாற்றத்தை அதிகரித்தல்” என்ற தலைப்பின் கீழ் உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க நாள் 2021 மே மாதம் 17 ஆம் திகதிய கொண்டாட்டத்தின் போது அவற்றை நாம் பகிர்வதோடு அவர்களுக்குரிய இடத்தை நாங்கள் வழங்குவோம். அது வரை பாதுகாப்பாக இருங்கள், ஆரோக்கியமாக இருங்கள் அத்தோடு உறுதியாகவும் இருங்கள்!